# LAABH SAMACHAR


லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 09 | DECEMBER 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE











அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

**மெட்ரோ ஷூ மார்ட்**

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343







GSTIN: 33ALZPD4776G1ZO

**மல்லிகை**
**The Mart**

GROCERY / TOYS / STATIONERY / GIFTS

Online Delivery : 9345910000

No. 198-A, South Masi Street, Madurai - 625001.




# தமிழ்நாடு சௌராஷ்ட்ரா அரசியல் எழுச்சி மாநாடு

நாள் : 28.12.2025 ஞாயிறு

இடம் : ராஜா முத்தையா மன்றம், மதுரை.

**நம் சமூகமே திரண்டு வாரீர்**

இவண்:

**அனைத்து சௌராஷ்ட்ர அமைப்புகள்**

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. திநேஷ், தலைவர்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கி 18 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளது. ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்வாக மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன்படி இதுவரை 8 முறை நிர்வாக மாற்றம் அடைந்துள்ளது. அந்த 8 முன்னோடி தலைவர்களின் செயல்பாடுகளையும், சேவைகளையும் பாராட்டி பெருமிதம் அடையும் விதமாக, நமது சேம்பர் வளாகத்தில் அவர்களின் திருவுருப்படங்களை வைத்துள்ளதை பெருமையாக கருதுகிறோம். முத்தாய்ப்பாக, நம் சமூகத்தின் சேவைமனப்பான்மையும், கொடையுள்ளமும் கொண்ட முன்னோர்களின் வழி வந்த திரு. K.L.Y. சசிதரன் Trustee, K.M. Subbier & Sons Charities அவர்களின் கரங்களால் திறக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. இதற்காக ஏற்பாடு செய்யபட்ட கூட்டத்தில், சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். முன்னாள் தலைவர்கள் தங்கள் ஆனந்தத்தை பகிர்ந்துகொண்டார்கள்.

ஒவ்வொரு மாதமும், லாப் ஸமாச்சார் இதழை முன்னோடி தொழிலதிபர்கள், அதிகாரிகள் என்ற வரிசையில் இருப்பவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி சென்ற மாதம் வேலம்மாள் குழுமத்தின் தலைவர் திரு. எம்.வி. முத்துராமலிங்கம் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. அவர் நம் சேம்பர் நிர்வாகிகளை மிகழ்ச்சியுடன் வரவேற்றார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற அந்த உரையாடலில், பல்வேறு தகவல்களும், அனுபவங்களும் கிடைத்தன. இந்த நிகழ்வில், மகாத்மா பள்ளி குழுமத்தின் தலைவர் திரு. பன்னீர் செல்வம் அவர்களும் உடன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

நமது சேம்பர்-ன் முதுநிலைத் தலைவர் திரு. கே.வி. பாலா அவர்களின் பி.வி.கே. குழுமம் மற்றும் இ.யு. இந்தியா சேம்பர்ஸ் இணைந்து ஐரோப்பிய, இந்திய வர்த்தக பயணத்தில் புதிய பிரத்யேக சேவை திட்டத்தை அறிவித்துள்ளன. நமது முதுநிலைத் தலைவரின் அடுத்த இலக்கை நோக்கிய வளர்ச்சிப்பயணத்திற்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

இன்று, நம் சமுதாய மக்கள் அனைவருக்குமான ஒரு எதிர்பார்ப்பு என்பது அரசியலில், நமக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே!. முன்பு நம் முன்னோர்கள் அரசியலில் கோலோச்சிக் கொண்டிருந்தனர், இன்று அதில் வெற்றிடமாக இருக்கிறது. மீண்டும் நம் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்த, வருகின்ற டிசம்பர் 28ம் தேதி ராஜா முத்தையா மன்றத்தில் தமிழ்நாடு சௌராஷ்ட்ர அரசியல் எழுச்சி மாநாடு நடைபெற இருக்கிறது. இந்த மாநாடு, நம் ஒற்றுமையை வெளிப்படுத்தவும், இழந்த பிரதிநிதித்துவத்தை மீட்கவும் நடத்தப்படுகிறது. நம் சமுதாய மக்கள் அனைவரும் கலந்து கொண்டு உரிமையை நிலைநாட்ட அழைக்கிறோம். வாருங்கள்!... நன்றி.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**27.11.2025** – மதுரையில், CGST கமிஷனர் திரு. திவாரி IRS., அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஜிஎஸ்டி குறை தீர்க்கும் கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தனர்.

**02.12.2025** – சேம்பர் அலுவலக வளாகத்தில், முன்னாள் தலைவர்களின் புகைப்படம் மற்றும் நடப்பு நிர்வாகிகளின் பெயர் பலகையுடன் கூடிய புகைப்படம் நிறுவப்பட்டது. இதனை, திரு. K.L.Y. சசிதரன் Trustee, K.M. Subbier & Sons Charities, Madurai அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**02.12.2025** – வணிகத்திலும் குடும்பத்திலும் மனதை ஆரோக்கியத்துடன் ஒருங்கிணைக்கும் வழிமுறைகள் குறித்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. K.S.P. ஜனார்த்தனன் பாபு, Director - Programmes, M.S. Chellamuthu Trust & Research Foundation, Madurai அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. K.L.Y. சசிதரன் Trustee, K.M. Subbier & Sons Charities, Madurai அவர்களும் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக் குழுத் தலைவர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**07.12.2025** – மதுரையில், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற மதுரை மாஸ்டர் ப்ளான் 2044 – முதலீட்டாளர்கள் மாநாட்டில், நமது சேம்பர் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில், நமது சேம்பர்–ல் உள்ள அங்கத்தினர்களும் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது மகிழ்ச்சியளிக்கிறது.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

சென்ற நவம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ் வேலம்மாள் குழுமத்தின் தலைவர் திரு. எம்.வி. முத்துராமலிங்கம் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. மதுரை மகாத்மா பள்ளியின் தாளாளர் திரு. பன்னீர் செல்வம் அவர்களும் உடனிருந்தது இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த சந்திப்பின்போது, திரு. எம்.வி. முத்துராமலிங்கம் அவர்கள் பல்வேறு தகவல்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார். இன்றைய தொழில், மருத்துவம். கல்வி போன்றவற்றையும், குறிப்பாக மதுரையில் வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் குறித்தும் மிகுந்த வருத்தத்தை தெரிவித்தார். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் போன்ற அமைப்புகள் கூடுதல் கவனம் செலுத்தி மதுரை நகரை தொழில் நகராக மாற்ற முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டால் வேலை வாய்ப்புகள் பெருகும். தமிழ்நாட்டில், அரசு வேலைக்கு ஒரு அறிவிப்பு வந்தால் தென் தமிழகத்தில் இருந்து தான் மிக அதிகமான இளைஞர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார்கள். கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், சென்னை, திருச்சி போன்ற நகரங்களில் தொழில் வாய்ப்புகள் விண்ணப்பிப்பவர்கள் குறைவு. இதற்கு காரணம், தென் தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள் மிக மிகக்குறைவு என்று சுட்டிக்காட்டினார்.

ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள், மீண்டும் தொழில்துறையில் எழுச்சி பெற வேண்டும். அதோடு, மதுரை மாநகரமும் வளர வேண்டும் என்றார். அவர் கூறியதை நமது சேம்பர் நிர்வாகிகள் கவனத்துடன் கேட்டுக்கொண்டனர். மாற்றத்திற்கு முயற்சிப்போம்.

நன்றி

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544

SCAN & PAY

### திருக்குறள்

**மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்**

**பொருள்:** மனம் கெடாமல் நல்லதாகவே இருப்பது ஒருவருடைய ஆன்மாவுக்குப் பலம் தரும். ஆனால் மனம் நல்லதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சேர்ந்திருக்கும் இனம் நல்லதாக இருந்தால் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாச் சிறப்புக்களும் உண்டாகும்.

அதிகாரம் 46 சிற்றினம் சேராமை அரசியல்





Best Compliments from
BVK GROUP
Bala V Kutti
Founder & Chairman
Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation
4th Floor (NW), Kothan Building. 114, M G Rood, Nungambakkam, Chennai - 600 834.
No 603. Keshava - BKC, Mumbai - 400 051.





# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் டிசம்பர் மாத நிகழ்ச்சி

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் டிசம்பர் மாத கூட்டம் கடந்த 02.12.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வணிகத்திலும் குடும்பத்திலும் மனதை ஆரோக்கியத்துடன் ஒருங்கிணைக்கும் வழிமுறைகள் என்கிற தலைப்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. K.S.P. ஜனார்த்தனன் பாபு, Director - Programmes, M.S. Chellamuthu Trust & Research Foundation, Madurai அவர்கள் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக திரு. K.L.Y. சசிதரன் Trustee, K.M. Subbier & Sons Charities, Madurai அவர்கள் கலந்து கொண்டார்.

கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

திரு. K.S.P. ஜனார்த்தனன் பாபு அவர்கள், அன்றாடம் வாழ்விலும், தொழிலிலும் நாம் சந்திக்கும், மனிதர்கள், பிரச்சனைகள் அதனை எதிர்கொள்ள நம் மனத்திற்கு எத்தகைய மனோ ரீதியான ஆற்றல் தேவை என்பதற்கு பல்வேறு விளக்கங்களை அளித்தார். சரியான உணவு பழக்கம், தூக்கம் போன்றவைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மனிதர்கள் தங்கள் உடல் மொழியின் மூலம் அவர்களின் மனோ சிந்தனை அறிந்து கொள்ள முடியும் என்றார். உளவியல் ரீதியான அறிகுறிகளை அடுத்துக்கூறி நாம் எத்தகைய நிலையில் இருக்கிறோம் என்று அறிந்துகொள்ளலாம் உணர்த்தினார். மிகவும் அறுமையாக பல்சுவை தகவலோடு நம் மனத்தை விழிப்பு நிலைக்குக் கொண்டு சென்றார். நிகழ்ச்சிக்கு கலந்து கொண்ட அனைவரும் ஆர்வத்துடன் காணப்பட்டனர்.

அவரைத் தொடர்ந்து, பேசிய கௌரவ விருந்தினர் திரு. K.L.Y. சசிதரன் அவர்கள், நம் சமூக முன்னோர்களின் சேவைகளை நினைவுக் கூர்ந்தார். முன்னோர்கள் வழி நாமும் நம் சேவைப் பணிகளை தொடர வேண்டும் என்றார்.

நிகழ்ச்சிக்கு கலந்து கொண்ட இருவரையும், சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




2007ம் ஆண்டு, ஸௌராஷ்ட்ர சேம்பர் துவங்கியது முதல் இன்று வரை நமது சேம்பருக்கு தலைவராக இருந்தவர்களின் புகைப்படங்கள் மற்றும் தற்போதைய நிர்வாகிகளின் பெயர் மற்றும் புகைப்படங்கள் ஸௌராஷ்ட்ர சேம்பர் அலுவலக வளாகத்தில், முதல் முறையாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த புகைப்படங்களை K.M. Subbier & Sons Charities டிரஸ்டி திரு. K.L.Y. சசிதரன் அவர்கள் திறந்து வைத்தார். முன்னாள் தலைவர்களும் நிர்வாகிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு 02.12.2025 அன்று மாலை நடைபெற்றது. முன்னாள் தலைவர்கள் தங்கள் அனுபவங்களை சுருக்கமாக பகிர்ந்துகொண்டனர்.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# கழிவுப் பஞ்சு விலை உயர்வு

## *உற்பத்தியை குறைக்க ஓஇ மில்கள் முடிவு!*

கிரே நூல் தயாரிக்கும் ஓபன் எண்ட்(ஓஇ) நூற்பாலைகளில் முக்கிய மூலப்பொருளான கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்க தொழில்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் மொத்தம் 600 ஓஇ ( கிரே நூல், கலர் நூல் இரண்டு தயாரிக்கும்) நூற்பாலைகள் உள்ளன. இவற்றில் 2.5 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஸ்பின்னிங் நூற்பாலைகளில் இருந்து பெறப்படும் கழிவுப் பஞ்சை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செயல்படும் 200(கிரே நூல் மட்டும் தயாரிக்கும்) ஓஇ நூற்பாலைகளில் 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கழிவுப் பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மறுசுழற்சி ஜவுளித் தொழில்கள் கூட்டமைப்பின் (ஆர்டிஎப்) தலைவர் ஜெயபால் மற்றும் தமிழ்நாடு ஓபன் எண்ட் நூற்பாலைகள் சங்க (ஓஸ்மா) தலைவர் அருள்மொழி ஆகியோர் பிரபல நாளிதழ் ஒன்றில் கூறியதாவது. மத்திய அரசு, ஸ்பின்னிங் நூற்பாலைகள் பயன்பெறும் வகையில் பருத்திக்கு இறக்குமதி வரி 11 சதவீதத்தை டிசம்பர் இறுதி வரை ரத்து செய்துள்ளது. இதனால் பஞ்சு விலை குறைந்துள்ளது. அதே போல் பாலியஸ்டர், விஸ்கோஸ் போன்ற செயற்கை இழைகளுக்கு முன் அமல்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாடு உத்தரவையும் மத்திய அரசு நீக்கியுள்ளது.

இதனால் மேற்குறிப்பிடப்பட்ட மூலப்பொருட்கள் விலை சர்வதேச சந்தை விலையில் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சலுகைகள் பெற்றுக்கொண்ட ஸ்பின்னிங் நூற்பாலை தொழில்துறையினர் வெளியேற்றப்படும் கழிவுப்பஞ்சை கொண்டு லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வரும் 'ஓஇ' நூற்பாலைகள் பாதிக்கும் வகையில் விலையை தொடர்ந்து உயர்த்தி வருவது ஏற்புடையதல்ல.

தற்போது ஒரு கிலோ ரூ. 100 ஆக இருக்க வேண்டிய கழிவுப் பஞ்சு (கோப்பர் நாயில் ரகம்) ரூ. 108-ஆக உயர்ந்துள்ளது. சாதாரண பஞ்சு விலை ஒரு கேண்டி ரூ. 6000 குறைந்த நிலையில் கடந்து இரண்டு மாதங்களில் மட்டும் கழிவுப் பஞ்சு விலை ஒரு கிலோவிற்கு ரூ. 8 வரை உயர்த்தியுள்ளனர்.

மேலும் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்ட வாய்ப்பு உள்ளது. ஜவுளி சங்கிலித் தொடரிலுள்ள ஒரு பிரிவு தொழில்துறையை (ஓஇ) முற்றிலும் பாதிக்கக்கூடிய செயலாகும். கழிவு பஞ்சு விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை 50 சதவீதம் குறைக்க 'ஓஇ' தொழில் துறையினர் முடிவு செய்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளில் 60 'ஓஇ' நூற்பாலை தொழில் துறையினர் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் நலிவடைந்து தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். கழிவுப் பஞ்சு விலையை ஸ்பின்னிங் நூற்பாலை நிர்வாகத்தினர் குறைப்பது மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஜவுளி ஏற்றுமதி நெருடிக்கடியை சமாளிக்க

## *மத்திய ரிசர்வு வங்கி அறிவித்த சலுகை*

இந்தியப் பொருட்கள் இறக்குமதிக்கு 50 சதவீத வரி விதித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டார். இந்த நடவடிக்கையால் இந்தியாவில் ஜவுளித் தொழில் ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

வரி விதிப்பு உத்தரவு 3 மாதங்கள் கடந்த நிலையில், இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை எதிர்கொள்ள சலுகைகள் அறிவிக்குமாறு மத்திய அரசுக்கு பல்வேறு தொழில் அமைப்பினரும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் ரிசர்வு வங்கி சலுகைகள் அறிவிப்பு வெளியிட்டுள்ளதற்கு தொழில் துறையினர் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு சுமார் ரூபாய் ஒரு லட்சம் கோடி வரை ஏற்றுமதி செய்துவந்த இந்திய ஜவுளி உற்பத்தியாளர்கள், இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் மீது திடீரென அமெரிக்கா அறிவித்த 50 சதவீத வரி விதிப்பு காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர்.

வரலாற்றிலேயே முதல்முறையாக உற்பத்தி நிறுத்தப்பட்டு பல லட்சம் தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை இழக்கும் நிலை ஏற்பட்டது. மேலும், கடன் மற்றும் வட்டியையும் செலுத்த முடியாமல் தொழில்துறையினர் கடும் நிதி நெருக்கடியை எதிர் கொண்டனர். இந்தப் பிரச்சினையை சமாளிக்க, ஓராண்டுக்கு கடனை திரும்பச் செலுத்த கால அவகாசமும், 30 சதவீத கூடுதல் கடனையும் வழங்குவதுடன், ஏற்றுமதி சலுகைகயையும் வழங்க ஜவுளித் துறையினர் வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இந்நிலையில், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில், செப்டம்பர் ஒன்று முதல் டிசம்பர் 31ம் தேதி வரை செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டியை செலுத்த, ஆயத்த ஆடை மற்றும் வீட்டு உபயோக ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கு கால அவகாசம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.



### இரங்கல்

நமது சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினரும், விஸ்வா கிராஃபிக்ஸ் உரிமையாளருமான திரு. **R.M. ஏகநாத்** அவர்கள் 23.11.2025 அன்று இறைவனடி சேர்ந்தார் என்பதை வருத்துத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். மீளாத் துயரத்தில் இருக்கும் அன்னாரது குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரது ஆன்மா இறைவன் திருவடி சேர நமது சேம்பர் பிரார்த்திக்கிறது.


# சொத்து மதிப்பீட்டுக்கு உதவும் - GIS தொழில்நுட்பம்

ஜிஐஎஸ் (Geographic Information System - GIS) எனப்படுவது ஒரு புவியியல் தகவல் முறைமை தொழில்நுட்பம், இது சொத்து மதிப்பீட்டுக்கு மிகவும் உதவியாக உள்ளதாக நில மதிப்பீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட சொத்தின் சந்தை மதிப்பை மதிப்பிட்டு, அதன் மதிப்பு குறித்து துல்லியமான அறிக்கையை வழங்கும் தொழில்முறை நிபுணர்கள் மதிப்பீட்டாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரசுத் துறைகள் மற்றும் தனிநபர்கள் போன்ற பல்வேறு தரப்பினருக்காக சொத்து மதிப்பு, காப்பீடு. வரிவிதிப்பு, விற்பனை, அடமானக் கடன்கள் போன்ற சேவைகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு, புவியியல் தகவல் முறைமை (GIS) தொழில்நுட்பம் உறுதுணையாக இருக்கும்.

இத்தொழில்நுட்பத்தின் மூலம், இடம் சார்ந்த தரவுகளின் அடிப்படையில். புவியியல் வடிவங்களை புரிந்துகொள்ள பகுப்பாய்வு செய்யப்படுகிறது. மேலும் தரவுகளை வரைபடங்கள், 3டி காட்சிப்படுத்துதல்கள் மூலம் எளிதாகப் புரிந்துகொள்ளும்படி காட்டுகிறது. இத்தொழில்நுட்பம் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்களில், வேளாண்மை நிலம், அரசு அலுவலகக் கட்டிடங்கள், வணிகக் கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு தனித்தனி வண்ணங்கள் கொடுத்து பிரித்து காட்டுகிறது. மேலும்,சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பிடுவதற்கு உறுதுணையாக உள்ளது. வெள்ள பாதிப்புகள் மற்றும் பிற பேரிடர்களை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

நகரங்களில் நிலப் பயன்பாடு, உள்கட்டமைப்பு போன்றவற்றை நிர்வகிக்க முடியும். நில உரிமை, மதிப்பு, மேலாண்மை மற்றும் பயன்பாடு உள்ளிட்ட நிலத் தகவல் மற்றும் நிலப் பதிவுகளில் அனைத்து அம்சங்களையும் நிர்வகிக்க இத்தொழில் நுட்பம் உதவுகிறது. விரிவான நில நிர்வாக அமைப்பில்




உள்ள அனைத்து நிலத் தகவல்களுடனும், அரசாங்கங்கள் நிலத் தகவல் மேலாண்மை, சொத்து மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு, பொதுமக்களுடனான தொடர்பு ஆகியவற்றை இதன்மூலம் மேம்படுத்த முடியும்.

இந்திய மதிப்பீட்டாளர்கள் கழக மதுரை கிளைத் தலைவர் திரு. விஜயகுமார் அவர்கள் கூறுகையில், புவியியல் தரவை உருவாக்க, பகுப்பாய்வு செய்ய, நிர்வகிக்க இத்தொழில்நுட்பம் பயன்படுகிறது. இது பொதுவாக செயற்கைக் கோள்கள், வான்வழிப் படங்கள், தரை ஆய்வுகள் போன்ற பல்வேறு மூலங்களில் இருந்து தரவுகளை சேகரித்து, அவற்றை ஒரே தரவுத்தளத்தில் ஒருங்கிணைக்கிறது.

பின்னர் இதனை பகுப்பாய்வு செய்து, வரைபடங்கள் விளக்கப் படங்கள், பிற காட்சிப் படுத்தல்களை உருவாக்கலாம். இதன் மூலம் நகர்ப்புற திட்டமிடல், இயற்கை வள மேலாண்மை, அவசரகால பதில் மற்றும் பொது சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முடிவெடுக்கும் செயல் முறைகளைத் தெரிவிக்கப் பயன்படும் எனக் கூறினார்.

# மதுரையில் விரைவில் மினி டைடல் பூங்கா

தமிழகத்தை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற இலக்கினை எட்டும் வகையில், அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், இளைஞர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தமிழக அரசு பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தகவல் தொழில்நுட்பச் சூழலை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, இத்திட்டத்துக்கு மதுரை மாட்டுத்தாவணியில் கடந்த பிப்ரவரி 18ம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி மூலம் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்த டைடல் பூங்காவனது, 5.34 லட்சம் சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 12 தளங்களுடன் கட்டப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை தொடங்கி 18 மாதங்களில் முடிக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதன்படி, 2026 ஜூன் மாதம் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தால் கிரேடு ஏ நிறுவனங்கள் வந்து குவியத் தொடங்கும். மதுரை மாவட்டத்தின் வளர்ச்சி சில ஆண்டுகளில் அதிகரிக்கும் இதன் மூலம் தகவல் தொழில்நுட்பம் படித்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவர். படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதால், மதுரையின் சமூகப் பொருளாதாரம் மேம்படும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# மருத்துவ தகவல்

**குளுகோசமின் மாத்திரைகளால் சர்க்கரை நோய் வருமா?**

மூட்டுத் தேய்மானத்திற்கு கொடுக்கப்படும் மாத்திரைகள் மூட்டுகளின் ஜவ்விற்கு ஆகாரம் போன்றது. இதன் பயன்கள் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை. ஆனால் பக்க விளைவுகள் மிகக் குறைவு என்பதால் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த மருந்தால் சர்க்கரை நோய் வருவது மிக அரிது.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எலும்பியல் மையம்

# Rule 10A – ஜிஎஸ்டி வங்கிக் கணக்கு கட்டாயம்

இந்த மாதம் GSTN ஒரு முக்கிய advisor வெளியிட்டுள்ளது. Rule 10A-யை இனிமேல் GST போர்டல் தானாகவே அமல்படுத்தப் போகிறது என்பதால், GST பத்திரிக்கை (REG-06) கிடைத்த நாள் முதல் 30 நாட்களுக்குள் வங்கி கணக்கு விவரம் upload செய்யாத வரித் தொழில் நபர்களின் GSTIN சஸ்பெண்ட் செய்யப்படும் அபாயம் அதிகரித்துள்ளது. இதுவரை பலர் இதை கவனிக்காமல் விட்டிருந்தாலும், enforcement வருகிற சமயம் மிக அருகில் இருக்கும் காரணத்தால், இது மிகவும் முக்கியமான இணக்கவிதியாக மாறியுள்ளது.

**Rule 10A என்ன சொல்கிறது?**

Rule 10A-ன் படி, GST Registration Certificate கிடைத்த பிறகு 30 நாட்களுக்குள் அல்லது முதல் தடவையாக GSTR-1 அல்லது IFF தாக்கல் செய்வதற்குமுன் வங்கி கணக்கு விபரங்களை GST போர்டலில் சேர்க்க வேண்டும். இது CGST Rules-ல் நீண்ட நாட்களாக இருந்த விதி தான். ஆனால் இதுவரை போர்டல் இதை கடுமையாக enforce செய்யவில்லை. இப்போது அதிகாரிகள் advisory மூலம் இது automated enforcement ஆக்கப்படப்போகிறது என்று தெரிவித்துள்ளார்கள்.

**யஸருக்கு விலக்கு இருக்கலாம்?**

இந்த advisory படி சில வகை பதிவுகளுக்கு விலக்கு வாங்குப்பட்டுள்ளது. அதாவது, TCS பதிவு, TDS பதிவு மற்றும் அதிகாரிகள் suo-moto செய்து தந்த GST பதிவுகள் ஆகியவை சில சந்தர்ப்பங்களில் Rule 10-A இன் நேரடி கட்டாயத்தில் இருக்காமல் இருக்கலாம். ஆனால் பொதுவாகச் சொல்ல வேண்டுமென்றால், பெரும்பாலான GST வரித் தொழில் நபர்களும் இந்த நிபந்தனையை அவசியம் பின்பற்ற வேண்டும்.

**Business செயல்பாடுகளுக்கு நேரப்போகும் பாதிப்புகள்.**

வங்கி வணக்கு விவரங்கள் போர்டலில் சேர்க்கப்படாத நிலையில் live ஆனவுடன் GSTIN சிஸ்டம் தானாகவே சஸ்பெண்ட் செய்யப்படும். GSTIN சஸ்பெண்ட் ஆவனவுடன் GSTR- மற்றும் GSTR-3 தாக்கல் செய்ய முடியாது. e-way Bill Generation பிரச்சினை வரும். Invoice raise செய்ய முடியாது. Suppliers மற்றும் Customer இடயேயான பரிமாற்றங்கள் நின்றுபோகும். GSTIN செய்ய Department-ஐ approach செய்ய வேண்டி வரும். ஆவணங்கள், காரணங்கள், Verification ஆகியவை தேவையாகும். இது தொழிலில் தடை மற்றும் நேர இழப்பு ஏற்படுத்தும்.

**ஏற்கனவே GST வைத்திருப்பவர்கள் செய்ய வேண்டியது.**

GST போர்டலில் login செய்து Services - User Services - View/update Bank Account சென்று Primary account சேர்க்கப்பட்டுள்ளதா என்று பாருங்கள். இல்லை என்றால் Cancelled cheque அல்லது Passbook first page அல்லது Bank Statement ஆகியவற்றில் ஒன்றை Upload செய்யுங்கள். Proprietorship என்றால் EVC Company அல்லது LLP என்றால் DSC மூலம் submit செய்ய வேண்டும். Upload செய்யப்பட்ட ஆவணங்கள் தெளிவாகவும், கணக்கு செயலில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

**புதிய GST பதிவுகள் மற்றும் Rule 14A பதிவுகள்.**

புதிய GST பெற்றவர்களாக இருந்தால், GST number வந்த தேதியலிருந்து 30 நாட்களுக்குள் வங்கி கணக்கு திறந்து GST போர்டலில் update செய்ய வேண்டும். 30 நாட்கள் என்றால், சிஸ்டம் தானாகவே GSTIN-ஐ சஸ்பெண்ட் செய்யும். Petrol bunk, வீட்டிலிருந்து நடத்தும் Business, புதிய Proprietorship எல்லாரும் இதை மிகவும் கவனமாக பின்பற்ற வேண்டும்.

**Quick checklist-நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை**

GST போர்டல்-ல் வங்கி விவரம் update செய்யப்பட்டுள்ளதா? Upload செய்யப்பட்ட ஆவணம் தெளிவாக இருக்கிறதா? Bank Account Name, GST Legel Name-க்கு Match ஆகுதா? கணக்கு மாற்றம் செய்திருந்தால் update பண்ணியுள்ளீர்களா? Company/LLP என்றால் DSC Signature completed ஆக இருக்கா ?

**நிபுணர்கள் தரும் நடைமுறை குறிப்புகள்:**

Bank IFSC code தவறாக இருந்தால் Verification Fail ஆகும். GST Legal Name மற்றும் Bank Account holder name ஒரே மாதிரி இருக்க வேண்டும். பழைய அல்லது மூடப்பட்ட Bank Account போர்டல்-ல் இருந்தால் உடனே remove செய்து, செயலில் இருக்கும் கணக்கை மட்டும் வைத்திருக்க வேண்டும். Tax Professionals ஆக செயல்படுகிறவர்கள் Clients list excel-ல் Maintain செய்து, எந்த Client update செய்யலன்னு monitor பண்ணினால் follow up செய்ய easy ஆக இருக்கும்.

**பொதுவான கேள்விகள் மற்றும் விளக்கங்கள்**

Composition Taxpayer-க்கும் இது பொருந்துமா என்ற கேள்வி வரலாம். Advisory-ல் சில விதிமுறைகளுக்குள் சொல்லப்பட்டுள்ளன. அதனால் GSTN Advisory-யை நேரடியாகப் பார்த்து Confirm செய்ய வேண்டும். Bank Account Update செய்த பிறகும் Status Check & Proof Save செய்து வைத்துக்கொள்ளலாம். Rejection reason இருந்தால் மீண்டும் upload செய்ய வேண்டும்.

**தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனை.**

Rule 10A எந்த நேரத்திலும் live ஆகலாம். GSTIN சஸ்பெண்ட் ஆன பிறகு பிஸினஸுக்கு பெரிய தடை வரும். அதனால் இதை prevent செய்வது தான் நல்லது. இன்றே GST Portal-ல் login செய்து Bank Details சரியாக உள்ளதா என்று பார்த்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் உடனே update செய்யுங்கள். இந்தச் சிறிய செயல் உங்கள் முழு Business- ஐ unnecessary suspension-லிருந்து காப்பாற்றும்.

*தகவல் உதவி*
*– என்.எஸ். பிரேம் குமார்*
*ஜிஎஸ்டி ஆலோசகர்*

# RBI Trade Relief Measures

## Summary

- Export proceeds realisation extended to 15 months (from 9 months).
- Shipment against advance allowed up to 3 years from date of advance.
- Moratorium allowed on all term loan + working capital interest due between Sep–Dec 2025.
- Banks can recalculate drawing power by reducing margins during the relief period.
- Export credit period increased to 450 days (from 270 days) till 31 Mar 2026.
- Packing credit can be liquidated using domestic sale proceeds or alternate export order proceeds (for shipments pending till 31 Aug 2025).
- All measures effective immediately as per RBI

*- T.G. Satheesh Kumar,* Textile Business

# New Rent Agreement

## Rules of 2025

Important Update for Every Tenant & Landlord in India! Major reforms have come into force, and they will completely change how renting works in our country.

### Key highlights

**Registration is now compulsory** Every rent agreement (home/shop) must be registered within 60 days. Unregistered agreements = Rs.5,000/- penalty + no legal value.

**No more verbal agreements** Only written & registered rent agreements are valid. Govt. will introduce a standard format soon.

**Security deposit capped** • Residential – max 2 months' rent • Commercial – max 6 months' rent Demanding 8 - 12 months is now illegal.

**Rent hike only once a year** Must give 90 days written notice.

**Stronger eviction protection** Mandatory notice: • <1 year stay → 1 month • 1-5 years →2 months • >5 years →6 months

**Fast-track Rent Courts** Disputes to be resolved in 60-90 days, avoiding long civil court battles.

**Landlord cannot enter without notice** At least 24 hours' written notice before inspection.

**Illegal eviction tactics = punishable** Lock change, cutting electricity/water, threats – all banned & punishable.

**Overstay penalty** If the tenant doesn't vacate after expiry → landlord can charge double rent. These rules aim to bring fairness, transparency & protection to both parties.

*- E.R.K. Vignesh Babu,* Textile Business

# Credit Guarantee Scheme for Exporters (CGSE)

**Scheme Guidelines (received by Texprocil from DGFT)**
**Summary of the CGSE is given below**

**Purpose of the Scheme** - To provide 100% guarantee coverage for the additional credit facility extended to the exporters who are in need of additional working capital to tide over any short term mismatches and to explore new potential markets

**Implementing Agency** - National Credit Guarantee Trustee Company (NCGTC)

**Date of Commencement** - The guidelines shall come into force from the date of issue of these guidelines by NCGTC

**Eligible borrowers** - Direct and indirect exporters - detailed eligibility criteria will be decided by the Management Committee of the Scheme.

**Quantum of Support** - Direct exporters: Upto 20% of sanctioned export working capital limits

**Indirect exporters:** Upto 20% of the working capital limits

**Maximum Loan Amount** - ₹50 crore per borrower

**Tenor of Loan** - 4 years from the date of first disbursement including moratorium of 1 year (i.e 1+3 years)

**Guarantee Fee** - Nil

**Credit Facility** - Financial assistance provided under the Scheme by way of additional term loan/working capital term loan facility to borrowers

**Interest Rate** - 1% below interest rate on existing facility on date of issue of guidelines

**Eligible Lending Institutions**-
(i) Scheduled Commercial Banks;
(ii) Scheduled Urban Co-operative Banks (SUCBs);
(iii) Non-Banking Financial Companies registered with RBI;
(iv) Financial Institutions: As defined in Reserve Bank of India Act, 1934

**Security** - The MLIs shall ensure to create charge on existing securities (primary as well as collateral) if any, within a stipulated time. No additional collateral security will be insisted for the scheme.

**Duration of Scheme** - The Scheme would be applicable from the date of issue of the guidelines by NCGTC upto 31.03.2026 or till guarantees amounting to ₹20,000 crore are issued, whichever is earlier.

Detailed operational guidelines of the scheme shall be issued by the National Credit Guarantee Trustee Company Limited (NCGTC) with the approval of the management committee.

*- T.G. Satheesh Kumar,* Textile Business

# புதிய தொழிலாளர் சட்டம் சில தகவல்கள்

- பழைய சட்டங்களின்படி ஒரு நிறுவனத்தில் ஓர் ஊழியர் 5 ஆண்டுகள் வேலை செய்தால் மட்டுமே பணிக்கொடை (கிராஜுட்டி) பெற முடியும். ஆனால், புதிய சட்ட விதிகளின்படி ஓராண்டு வேலை செய்தாலே கண்டிப்பாக பணிக்கொடை வழங்க வேண்டும்.
- பணிக்காலத்தின்போது ஓர் ஊழியர் உயிரிழந்தால் அவரது வாரிசுதாரருக்கு பணிக்கொடை வழங்க வேண்டும்.
- புதிய சட்டங்களில் பணிக்கொடை உச்ச வரம்பு ரூ. 20 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு வரிவிலக்கு சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு நிறுவனம் தனது ஊழியருக்கு 30 நாட்களுக்குள் பணிக்கொடை வழங்க வேண்டும். ஒரு மாத அவகாசத்தை தாண்டினால் 10 சதவீத ஆண்டு வட்டியுடன் பணிக்கொடையை வழங்க வேண்டும்.
- புதிய சட்ட விதிகளின்படி, நிரந்தர ஊழியர்களைப்போல, ஒப்பந்த ஊழியர்களுக்கும் விடுப்பு, மருத்துவ வசதி, இபிஎஃப், இஎஸ்ஐ உள்ளிட்ட உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
- பழைய சட்ட விதிகளின்படி, ஊழியரின் சம்பளத்தில் 30 சதவீதம் மட்டுமே அடிப்படை சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டது. புதிய சட்ட விதிகளின்படி இது 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் இபிஎஃப் பிடித்தம் அதிகரிக்கும். இதன் காரணமாக தொழிலாளர்ளுக்கு கையில் கிடைக்கும் சம்பளம் குறையும். ஆனால், பணி ஓய்வுக் காலத்தில் இபிஎஃப், பணிக்கொடை அதிகமாக கிடைக்கும்.
- 10 வேலையாட்களுக்கு குறைவாக இருப்பினும் இ.எஸ்.ஐ., காப்பீடு பாதுகாப்பு பெற முடியும்.
- புதிய விதிகளின்படி அனைத்து தொழிலாளர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக நியமனக் கடிதம் வழங்கப்பட வேண்டும்.
- பணி நேரத்தைத் தாண்டி கூடுதல் நேரம் பணியாற்றினால் ஒரு மடங்கு சம்பளம் வழங்க வேண்டும்.
- 40 வயதை தாண்டிய தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆண்டுதோறும் முழு உடல் பரிசோதனை நடத்த வேண்டும்.
- எம்எஸ்எம்இ நிறுவனங்கள் 7ம் தேதிக்கு முன்பாக ஊதியம் வழங்கிவிட வேண்டும்.
- பணிநிமித்தமான பயணம் அல்லது வீட்டில் இருந்து அலுவலகத்தில் வரும் வழியில் ஊழியர் விபத்தில் சிக்கினால் உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.
- அனைத்துத் துறைகளிலும் பெண்கள் இரவுப் பணியில் ஈடுபலாம். அதேநேரம் அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.
- ஒரே மாதிரியான வேலைக்கு, ஊதிய விஷயத்தில் பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது. பெண்களுக்கு சமவாய்ப்பு, சம ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- மகப்பேறு சலுகைகளுக்குத் தகுதி பெற, ஒரு பெண் எதிர்பார்க்கப்படும் பிரசவத்திற்கு முந்தைய 12 மாதங்களில் குறைந்தது 80 நாட்கள் ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்திருக்க வேண்டும்.
- மகப்பேறு விடுப்பின் அதிகபட்ச காலம் 26 வாரங்கள் ஆகும். இதில் 8 வாரங்கள் வரை எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதிக்கு முன்னதாக எடுத்துக்கொள்ளலாம்.
- ஒரு பெண்ணுக்கு ஒதுக்கப்பட்ட வேலை அவள் வீட்டிலிருந்து வேலை செய்யக்கூவடிய தன்மை கொண்டதாக இருந்தால், முதலாளியும் பெண்ணும் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளக்கூடிய காலத்திற்கு மகப்பேறு சலுகையைப் பெற்ற பிறகு, முதலாளி அவரை அனுமதிக்கலாம்.
- கட்டுமானத்துறையில் உள்ளவர்களுக்கு, அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை விடக் குறைவாக எந்தவொரு பணியாளருக்கும் ஊதியம் வழங்கக்கூடாது.
- வீடுகளுக்கு உணவு உள்ளிட்டவற்றை விநியோகம் செய்யும் தொழிலாளர்களுக்காக (சோமேட்டோ. ஸ்விக்கி, பிங்கிட்) அந்தந்த நிறுவன உரிமையாளர்கள், சிறப்பு நல நிதியங்களை அமைக்க வேண்டும்.
- அவரவர் நிறுவன வருவாயில் 1.2 சதவீதத்தை நல நிதியங்களுக்கு வழங்க வேண்டும்.
- ஆபத்தான பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு 100 சதவீத சுகாதாரப் பாதுகாப்பு வழங்கப்ப வேண்டும்.
- 40 பேருக்கு மேல் பணியாற்றும் தொழிற்சாலைகளில் ஆண்டுதோறும் மருத்துவ பரிசோதனை, அனைத்து ஊழியர்களுக்கும் சரியான நேரத்தில் வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.




# இந்தியாவில் முதலீடு செய்ய
# இதுவே சரியான நேரம்

ஒரு காலத்தில் 2ஜி உடன் போராடிய நமது நாடு, இன்று 5ஜி சேவை கிட்டத்தட்ட ஒவ்வொரு மாவட்டத்தையும் சென்றடையும் அளவுக்கு முன்னேறியுள்ளது. இந்தியாவில் டிஜிட்டல் இணைப்பு என்பது ஒவ்வொரு இந்தியரின் வாழ்விலும் ஒருங்கிணைந்த அங்கமாகும். இந்தியா கடந்த தசாப்தத்தில் டிஜிட்டல் துறையில் மிகப்பெரிய முன்னேற்றத்தை எட்டியுள்ளது. 1 ஜிபி டேட்டா ஒரு கப் தேநீரின் விலையை விட மலிவானதாக மாறியுள்ளது.

நிதிசார் மோசடி பாதுகாப்பு, குவாண்டம் தகவல் தொடர்பு, 6ஜி அலைக்கற்றை சேவை, கண்ணாடி இழை தகவல் தொடர்பு, செமிகண்டக்டர் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த கருப்பொருள்களில் புத்தொழில் நிறுவனங்கள் எண்ணற்ற செயல்திட்டங்களை வழங்கியுள்ளன.

மொபைல், தொலைத்தொடர்பு, மின்னணுவியல் உள்ளிட்ட ஒட்டுமொத்த தொழில்நுட்ப சூழலில் ஏற்படும் சிக்கல்களுக்கு உலக நாடுகளுக்கு தீர்வு வழங்க இந்தியாவுக்கு சிறப்பான வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேக்-ன்-இந்தியா திட்டத்தில் மொபைல் போன்கள், செமிகண்டக்டர், எலக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வளர்ச்சி மற்றும் சீர்திருத்தங்களின் வேகத்தை அரசு துரிதப்படுத்தி வருகிறது.

இந்தியாவின் ஜனநாயக அமைப்பு, அரசின் வரவேற்கத்தக்க அணுகுமுறை மற்றும் வணிகம் செய்வதற்கான எளிமை ஆகியவை முதலீட்டாளர்களின் நட்பு மிகுந்த நாடு என்ற பிம்பத்தை நம்நாடு அடைய உதவியுள்ளன.

இந்தியாவில் முதலீடு செய்யவும், புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் இதுவே சிறந்த சரியான நேரம் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# வாடகைக்கு தங்கம்
## முதலீட்டாளர்களின் புதிய யுக்தி

பணக்காரர்கள் முதலீட்டுக்காக தாங்கள் சேமித்து வைத்துள்ள தங்கக் கட்டிகளை வாடகைக்கு விடுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

சமீப காலமாக தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் நகை உற்பத்தியாளர்கள் வெளிநாட்டிலிருந்து தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு பதில், பழைய நகைகள் அல்லது உள்ளூர் சந்தையிலிருந்து கிடைக்கும் தங்கக் கட்டிகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், பணக்காரர்கள் சேமிப்புக்காக தாங்கள் வாங்கி வைத்துள்ள தங்கக் கட்டிகளை நகைக் கடைக்காரர்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கின்றனர். தங்கம் மொத்த விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்திற்கு சமீப காலமாக பணக்கார முதலீட்டாளர்களிடமிருந்து நிறைய தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. என்னிடம் குறிப்பிட்ட மதிப்பிலான தங்கக் கட்டி உள்ளது, அதை வாடகைக்கு விட முடியுமா எனக் கேட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

# 2026-ம் ஆண்டு
## அரசு பொது விடுமுறை நாட்கள்

| வ. எண் | பொது விடுமுறை | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கில புத்தாண்டு | 01.01.2026 | வியாழன் |
| 2. | தைப் பொங்கல் | 15.01.2026 | வியாழன் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16.01.2026 | வெள்ளி |
| 4. | உழவர் திருநாள் | 17.01.2026 | சனி |
| 5. | குடியரசு தினம் | 26.01.2026 | திங்கள் |
| 6. | தைப்பூசம் | 01.02.2026 | ஞா யிறு |
| 7. | தெலுங்கு வருடப் பிறப்பு | 19.03.2026 | வியாழன் |
| 8. | ரம்ஜான் | 21.03.2026 | சனி |
| 9. | மகாவீர் ஜெயந்தி | 31.03.2026 | செவ்வாய் |
| 10. | வங்கி கணக்கு முடிவு | 01.04.2026 | புதன் |
| 11. | புனித வெள்ளி | 03.04.2026 | வெள்ளி |
| 12. | தமிழ்ப் புத்தாண்டு / அம்பேத்கர் பிறந்த நாள் | 14.04.2026 | செவ்வாய் |
| 13. | மே தினம் | 01.05.2026 | வெள்ளி |
| 14. | பக்ரீத் | 28.05.2026 | வியாழன் |
| 15. | முகரம் பண்டிகை | 26.06.2026 | வெள்ளி |
| 16. | சுதந்திர தினம் | 15.08.2026 | சனி |
| 17. | மிலாது நபி | 26.08.2026 | புதன் |
| 18. | கிருஷ்ண ஜெயந்தி | 04.09.2026 | வெள்ளி |
| 19. | விநாயகர் சதுர்த்தி | 14.09.2026 | திங்கள் |
| 20. | காந்தி ஜெயந்தி | 02.10.2026 | வெள்ளி |
| 21. | ஆயுத பூஜை | 19.10.2026 | திங்கள் |
| 22. | விஜய தசமி | 20.10.2026 | செவ்வாய் |
| 23. | தீபாவளி பண்டிகை | 08.11.2026 | ஞா யிறு |
| 24. | கிருஷ்துமஸ் | 25.12.2026 | வெள்ளி |

G.O.(Ms.)No.708, Dated 11th November 2025
Holidays-Public Holidays under Negotiable Instruments Act, 1881 for the State Government Offices and all Commercial Banks including Co-operative Banks in Tamilnadu for the year 2026 - Order issued.

**இதன் செயல்முறை:** தங்கத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்குவது என்பது கடன் கொடுப்பது போன்ற முறையில் செயல்படுகிறது. இங்கு பணம் அல்லது சொத்துக்குப் பதில் தங்கம் கைமாறுகிறது. முதலீட்டாளர்கள் தங்களிடம் உள்ள தங்கத்தை ஒரு குத்தகை தளம் அல்லது நிதி நிறுவனத்திடம் ஒப்படைப்பார்கள்.

அந்த நிறுவனம், தங்க நகை உற்பத்தியாளர்களுக்கு தங்கத்தை கடனாக வழங்கும். இதை பெற்றுக் கொள்பவர்கள் குறிப்பிட்ட தொகையை வட்டியாக வழங்குவர். குறிபிட்ட காலத்துக்குப் பிறகு அந்த தங்கத்தை முதலீட்டாளருக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

# தமிழ்நாடு சௌராஷ்ட்ர அரசியல் எழுச்சி மாநாடு
# ஏன்? ஏதனால்? ஏதற்கு?

ஒரு நாட்டிற்கு அரசு என்பது எப்படி இன்றியமையாததோ, அதேபோல ஓர் இனத்திற்கு அரசியல் என்பது தவிர்க்க முடியாதது. சௌராஷ்ட்ரர்கள் அரசியலை தவிர்த்து வந்ததனால், இன்று பல பொதுப் பிரச்சனைகளால் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

அரசியல் பிரதிநிதித்துவம் என்பது நம் வாழ்வாதாரம். அதனை ஒரு போதும் இழக்கக்கூடாது. அப்படி நடந்தால் அது சமூகத்திற்கே ஓர் இழுக்கு. நம்முன்னோர்கள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிய வழியில் தொடர்ந்து புனிதப் பயணம்செய்ய வேண்டியதே, அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் பிரதிநிதித்துவம் என்பதே நம் இலக்கு.

நம் சமூகத்தில் பள்ளிகள், கல்லூரிகள் என பல கல்வி நிறுவனங்கள் ஏற்பட்டதற்கு நமது இந்த அரசியல் பிரதிநிதித்துவமும் ஒரு காரணம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மருத்துவக்கல்லூரி போன்று மேலும் பல புரட்சிகள் நமக்கு நிகழவேண்டும் என்றால் நமக்கென்று அரசியலில் ஒரு நிரந்தர இருப்பிடம் தேவை. அதனை உறுதி செய்வதற்காக ஓர் அடித்தளம் நாட்ட வேண்டியது நம் அனைவரின் கடமை.

பல்கலைக்கழகத்தில், மாநகராட்சியில் மற்றும் பல அரசாங்க வேலைகள் என நம் மக்களுக்குப் பெற்றுத் தந்தது நமக்கிருந்த அரசியல் பிரதிநிதித்துவம் தான் என்றால் அது மிகையாகாது.

அதேபோல, தொழில் மற்றும் வியாபாரத்திற்கு உறுதுணையாக நின்று, அரசாங்க விண்ணப்பங்களை துரிதப்படுத்தி நம் பொருளாதாரம் விண்ணுயர செய்தது நமது அரசியல் முக்கியத்துவம் தான் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

பல காலனிகள் உருவாகி, நம் மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்தது மட்டுமல்லாமல், அவர்களின் முன்னேற்றத்திற்கு பாலம் அமைத்துக்கொடுத்ததும் அரசியல் பிரதிநிதித்துவம் தான் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

இப்படிப்பட்ட மக்களின் அடிப்படை அவசியமான உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்றிலும் பிண்ணிப் பிணைந்திருப்பது அரசியல். இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கல்வி, தொழில் போன்றவற்றில் அடுத்த கட்டத்திற்கு நம் சமூகம் முன்னேற, நம் முன்னோர்கள் கட்டிக்காத்த நம் கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளை பேணிப்பாதுகாக்க, நம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, நமக்கு அரசியல் பிரதிநிதித்துவம் மிக மிக முக்கியம்.

தற்காலிகமாக தடைப்பட்ட பொற்காலம் மீண்டும் திரும்ப, அரசியலில் மறுபடியும் உரிய பிரதிநிதித்துவம் பெற, நம் சமூகத்தின் மேன்மை மென்மேலும் உச்சத்தை தொட, அரிய வாய்ப்பு, வரும் 2026 சட்டமன்ற தேர்தல் தான் என்பதை நாம் உணர வேண்டும். அதனை சாதகமாக எதிர்கொள்ள வேண்டிய அவசர அவசியத்தின் விளைவு தான் 28.12.2025 (ஞாயிறு) அன்று நடக்கும் தமிழ்நாடு சௌராஷ்ட்ர அரசியல் எழுச்சி மாநாடு.

இந்த மாநாட்டில், நம் சமூகத்தின் அரசியல் பாரம்பரியம் மற்றும் தொண்டுள்ளம் கொண்டு எல்.கே.டி., என்.எம்.ஆர்.எஸ் போன்றவர்கள் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்து, நமது அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட உள்ளன.

அனைத்துக்கட்சி அரசியல் தலைவர்களையும் அழைத்து அவர்களிடம் நம் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகோள் விடுக்கப்பட இருக்கிறது. பல கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் கலந்துகொள்ள இருப்பது நம் சமூகம் பெருமை அடையும் வாய்ப்பு.

புலம்பெயர்ந்து வந்து தலைமுறை தலைமுறையாக தமிழ் கலாச்சாரத்துடன் ஐக்கியமாகியும், நமது சடங்குகளை விடாமல் கடைப்பிடித்து தனித்துவமிக்கதாகவும், வாழ இடம் கொடுத்த வர்க்கத்தினருடன் விசுவாசமாக இருக்கும் சமூகம் என்பதை மேற்கொண்டு எடுத்துச் செல்லும் இன்றியமையாத தருணம் இது.

2021 சட்டமன்றத் தேர்தலில் இழந்த செல்வாக்கு, மதுரை மாநகராட்சியில் இடம்பெற முடியாமல் போன அவலநிலை போன்றவை மாற, மீண்டும் நம் செங்கோல் உயரச்செய்வதற்கு முதல்படி தான் இந்த விழிப்புணர்வு மாநாட்டின் முக்கிய அம்சமாகும்.

அனைவரும் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பை பதிவு செய்யுங்கள்.

இது சமூகக் கடமை... தார்மீக உரிமை...

வாழ்க ஸௌராஷ்ட்ரம்!...

– வீரஜா



# நிகழ்வுகள்







நமது முதுநிலைத் தலைவர் திரு. பாலா குட்டி அவர்களின் முயற்சியால் இந்திய-ஐரோப்பிய யூனியன் சேம்பர்ஸ் & பிவிகே குழுமம் இணைந்து புதிய பிரத்யேக சேவை திட்டத்தை அறிவித்து உள்ளது. இதில் ஆட்டோமோடிவ், மின்சார வாகனங்கள், மின்னணுவியல், ஜவுளி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் விண்வெளி ஆகியவற்றில் மாநிலத்தின் நிலைத்தன்மை, தொழில்நுட்பம் மற்றும் மீள் விநியோகச் சங்கிலிகளில் ஐரோப்பாவின் முன்னுரிமைகளுடன் எவ்வாறு தடையின்றி ஒத்துப்போகின்றன என்பதை கலந்தாய்வு செய்யப்பட்டது.

மதுரையில் கடந்த 07.12.2025 அன்று முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் சேம்பர் சார்பாக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு முதல்வர் M.K. ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், திண்டுக்கல் பாலவிக்னா குழுமம், ஜெயஸ்ரீ ஸ்பன்பாண்டு ஆகிய சேம்பர்-ன் உறுப்பினராக உள்ள நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசுடன் கையெழுத்திட்டத்தில் மகிழ்ச்சியளிக்கிறது. நம் சமூக நிறுவனத்தார்கள் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.







27.11.2025 அன்று மதியம் CGST கமிஷனர் திரு. திவாரி IRS அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஜிஎஸ்டி மாதாந்திர குறைதீர் கூட்டத்தில் நமது சேம்பர் சார்பாக பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்களும், ஜிஎஸ்டி ஆலோசகர் திரு. N.S. பிரேம் குமார் அவர்களும் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தனர். கூட்டத்தில், பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கமிஷனர் அவர்கள், பெறப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் நவம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழை வேலம்மாள் குழுமத்தின் தலைவர் திரு. எம்.வி. முத்துராமலிங்கம் அவர்கள் வெளியீடு செய்தார். மகாத்மா பள்ளி குழுமத்தின் தலைவர் திரு. பன்னீர் செல்வம் அவர்களும் உடனிருந்தார். சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. கே.கே. ராம்குமார் அவர்கள் இந்த சந்திப்பிற்கு உதவி செய்தார். இந்த நிகழ்வில், சேம்பர் நிர்வாகிகள் மற்றும் லாப் ஸமாச்சார் இதழ் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.







Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW Steel
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்






ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®
RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...




மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIGNESH GRAPHICS
All Kinds of Printing Solution



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.
Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.
Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.
O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

100 YEARS SRB SINCE 1901
S.S.KISHORILAL
92445 00633
0452 - 3558788
PRIDE OF MADURAI
SINCE 1901
SRB SILKS HOUSE
Fashion Creators in Silk Sarees
402 LG Complex, K.K.Nagar, Madurai - 625 020. Opp Sundaram Park / Near UCO Bank

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.12.2025 / BPC MDU
Date of Publication 20th of Every Month

**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846




Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VSOC – Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

VALE HOSPITAL – RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு
78000 ரூ
அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

MSME
TANGEDCO

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011



*Official Publication:*
SOURASHTRA CHAMBER OF COMMERCE
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com